# சீர்காழி நகராட்சி



**2023–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20–ஆம் தேதி நாள்:20.12.2023 புதன்கிழமை மாலை 04.00 மணிக்கு நகர்மன்ற கூடத்தில் சிறப்புக் கூட்டம் நடவடிக்கை.**

**திருமதி.R.துர்காபரமேஸ்வரி.MBA.,**
**நகர்மன்ற தலைவர்,**
**சீர்காழி நகராட்சி.**

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1 | சீர்காழி நகராட்சி அருகாமையில் எல்லையை ஒட்டி அமைந்துள்ள அபிவிருத்தி அடைந்து வரும் ஊராட்சிகளை நகராட்சியுடன் இணைப்பதற்கு உள்ளாட்சி அமைப்புகளை சேர்த்தல் மற்றும் ஒருங்கிணைத்தல் தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் கடித ந.க.எண்: 7145/2023/எம்ஏ2. நாள்:15.12.2023 படியும், அரசாணை எண்:142, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள்:23.11.2023 -ன் படியும், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண்: 950/2023/அ3, நாள்:15.12.2023–ன் படியும் , சீர்காழி நகராட்சி எல்லையை ஒட்டி அமைந்துள்ள 45–செம்மங்குடி, 47–திட்டை, 48–சட்டநாதபுரம், 53–விளந்திடசமுத்திரம் ஆகிய அபிவிருத்தி அடைந்து வரும் ஊராட்சி பகுதிகளை பொதுமக்கள் நலன் கருதியும் நிர்வாக நலன் கருதியும் நகராட்சியுடன் இணைக்க முன்மொழிவுகள் மாவட்ட ஆட்சியர் மயிலாடுதுறை அவர்களின் பரிந்துரையோடு அரசுக்கு அனுப்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:</u>** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 5635/2013/எப்1 | தீர்மான எண்-<br>1044<br>நாள்.20.12.2023<br>அலுவலகக் குறிப்பு<br>அங்கீகரிக்கப்பட்டது |

நாள்: 19-12-2023
இடம்: சீர்காழி

நகர்மன்றதலைவர்,
சீர்காழிநகராட்சி

# சீர்காழி நகராட்சி



**2023–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 22–ஆம் தேதி நாள்:22.12.2023 வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற கூடத்தில் சாதாரணக் கூட்டம் நடவடிக்கை.**

**திருமதி.R.துர்காபரமேஸ்வரி.MBA.,**
**நகர்மன்ற தலைவர்,**
**சீர்காழி நகராட்சி.**

| | | |
|---|---|---|
| பொருள் எண்-1 | சீர்காழி நகராட்சி பொதுசுகாதார பிரிவில் நவம்பர்–2023 மாதத்திற்கு வரப்பெற்ற விபரங்களின்படி பிறப்பு–32 மற்றும் இறப்பு –24 பதிவுகள் ஆக மொத்தம் பதிவுகள் 56 இந்நகராட்சியில் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது என்பதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 2361/2023/எச்1. | தீர்மான எண்-<br>1045<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-2 | சீர்காழி நகராட்சி கலைஞர் நகர்புற மேம்பாட்டு 2023-24 திட்டத்தின் கீழ் புதிய மீன் மார்கெட் கட்டிடம் கட்டும் பணிக்கு G.O (4D) No.35 நாள்.18.08.2023ல் **ரூ.120.00** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசு திட்ட நிதியில் 50% மற்றும் பொது நிதியிலிருந்து 50% என நிர்வாக அனுமதி பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 798/2023/இ1/1 | தீர்மான எண்-<br>1046<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-3 | சீர்காழி நகராட்சி கலைஞர் நகர்புற மேம்பாட்டு 2023-24 திட்டத்தின் கீழ் புதிய பேருந்து நிலையத்தை மேம்பாடு செய்யும் பணிக்கு G.O (4D) No.39 நாள்.14.09.2023ல் **ரூ.842.00** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசு திட்ட நிதியில் 50% மற்றும் பொது நிதியிலிருந்து 50% என நிர்வாக அனுமதி பெறப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 798/2023/இ1 | தீர்மான எண்-<br>1047<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-4 | சீர்காழி நகராட்சி வார்டு எண்:5 ஈசானியத்தெரு, சுடுகாட்டில் நவீன எரிவாயு தகனமேடை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிகளுக்கு 3 ஆண்டுகள் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள தகுதி வாய்ந்த அறக்கட்டளை மற்றும் அரசுப் பதிவு பெற்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் விண்ணப்பம் கோரப்படுவதற்காக பொது அறிவிப்பு விளம்பரம் தினமணி செய்திதாளில் 19.10.2023 அன்று விளம்பரம் செய்யப்பட்டது. அதற்குண்டான | தீர்மான எண்-<br>1048<br>நாள்.22.12.2023 |

| | | |
|---|---|---|
| | பட்டியல் தொகை **ரூ.1,932/-**ஐ நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>__அலுவலக்குறிப்பு:__ 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்: 3000/2021/எச்1. | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-5 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வரிவசூல் தொடர்பான ஆய்வுக் கூட்ட அறிவுரைகளின்படி, இந்நகராட்சி வரிவசூலில் மிகவும் பின்தங்கி உள்ளது எனவும் அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது, வரிவசூல் தொடர்பான வரிவிதிப்பாளர்களிடமிருந்து தொகையினை வசூல் செய்திட தேவையான கேட்பு அறிவிப்புகள் அச்சடித்து வரிவிதிப்பாளர்களுக்கு வழங்கிட அவசியமாகிறது. எனவே சொத்துவரி, தொழில்வரி , காலிமனை வரி மற்றும் குடிநீர் இணைப்பு ஆகியவற்றிற்கான கேட்பு அறிவிப்புகள் மயிலாடுதுறை மாவட்ட அச்சக சேவை மற்றும் உபதொழில்கள் கூட்டுறவு சங்க லிமிட், அவர்களிடமிருந்து அச்சடித்து வழங்கிட, அதற்காகும் செலவினம் **ரூ.25,000/-**க்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>__அலுவலக குறிப்பு:__<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று செலவினம் மேற்கொள்ள மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 2641 /2023/அ1 | தீர்மான எண்- 1049<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-6 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தீபாவளி மற்றும் விழாகாலங்களில் தற்காலிக விழாகால கடைகள் அமைக்கப்பட்டு நடத்தி வருவது தொடர்பாக, நகராட்சி வருவாய் ஈட்டும் பொருட்டு நகராட்சியின் பெயரில் 20000 டோக்கன்கள் (அலுவலக ரசீதுகள்) மயிலாடுதுறை மாவட்ட அச்சக சேவை மற்றும் உபதொழில் கூட்டுறவு சங்க லிமெட் நிறுவனத்தில் அச்சிட்டு பெறப்பட்டுள்ளது. இப்பணிக்கான பட்டியல் **ரூ.16,520/–** வழங்கிடகோரி மேற்படி நிறுவனத்திடமிருந்து பட்டியல் வரப்பெற்றுள்ளது. நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்படி தொகை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>__அலுவலகக்குறிப்பு__:<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவரின் முன்அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.<br>ந. க. எண்: 191 /2023/ அ1. | தீர்மான எண்- 1050<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-7 | நகராட்சி, ஈசானியத்தெரு நுண்ணுயிர் உரக்கிடங்கில் அமைந்துள்ள (FSTP) கசடு கழிவுநீர் சுத்தகரிப்பு மையத்தில் கழிவுநீர் கொண்டு வரும் தனியார் வாகனங்களுக்கு ஒரு நடைக்கு **ரூ.100/-** வீதம் வ.எண்:1 முதல் 50000வரை டோக்கன்கள் அச்சிட்டு தமிழ்நாடு பல்நோக்கு சேவை தொழிற் கூட்டுறவு சங்கம் லிட்,. என்ற நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இந்நிறுவனத்திடமிருந்து விலைப்பட்டியல் **ரூ.88,500/-**க்கு வரப்பெற்றுள்ளது. நகர்மன்ற தீர்மான எண்.1012, நாள்:31.10.2023ல் **ரூ.50,000/-**க்கு அனுமதி அளித்துள்ளதை தொடர்ந்து மீதமுள்ள தொகை **ரூ.38,500/-**ஐ நகராட்சியின் பொதுநிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>__அலுவலக்குறிப்பு:__ 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்: 075/2023/எச்1 | தீர்மான எண்-1051<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>பொருள் எண்-8</td>
<td>இந்நகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் மூலம் பொது மக்களுக்கு தூய்மை பணியின் முக்கியத்துவம் குறித்த போதிய விழிப்புணர்வு ஏற்படுத்துதல், மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளை தரம் பிரித்து வழங்குவதால் ஏற்படும் நன்மைகள் குறித்து பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் நாடகம் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. எனவே மக்கள் கூடும் , இடங்களில் நாடகக் குழுக்கள் மூலம் கலை நிகழ்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வு நாடங்கள் நடத்தி பொதுமக்கள் பயன்பெரும் வகையில் நாடகங்கள் நடத்தவும், இது குறித்து மக்களுக்கு போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தவும், அதற்காகும் செலவீனம் தொகை ரூ.59,500/–க்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண். 2766/2023/எச்1</td>
<td>தீர்மான எண்- 1052<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-9</td>
<td>நகராட்சி வார்டு எண்:5 ஈசானியத்தெரு, சுடுகாட்டில் நவீன எரிவாயு தகனமேடை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்கு 3 ஆண்டுகள் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள விளம்பரம் செய்யப்பட்டதில் கீழ்கண்ட 2 தொண்டு நிறுவனங்களிலிருந்து விண்ணப்பங்கள் வரப்பெற்றது.
<table>
<tr><th>வ. எண்</th><th>தொண்டு நிறுவனங்களின் உரிமையாளர் பெயர் மற்றும் முகவரி</th></tr>
<tr><td>1</td><td>திரு.சந்தோஷ் சாரிடபிள் டிரஸ்ட்,<br>நெ.16G பிடாரிகுளம் ரோடு,<br>கும்பகோணம்.</td></tr>
<tr><td>2</td><td>திரு.இரா.பாபு நிறுவனர்,<br>காமராஜர் மக்கள் நல சேவை அறக்கட்டளை<br>19/6 ஈசானியத்தெரு, சீர்காழி.</td></tr>
</table>
அரசாணை நிலை எண்:228 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி3) துறை நாள்.13.11.2008ன் படி தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின்படி மேற்காணும் நிறுவனங்களில் தகுதி வாய்ந்த நிறுவனத்தை தேர்வு செய்வது குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் ஒப்புதல் பெற பிரேரணை அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 3000/2021/எச்1.</td>
<td>தீர்மான எண்- 1053<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-10</td>
<td>சீர்காழி நகராட்சி – பொதுநிதி திட்டம் 2023–24 – சீர்காழி நகராட்சி புதிய பேருந்து நிலையம் அம்மா உணவகத்திற்கு டோக்கன் இயந்திரம் மற்றும் வருகைப் பதிவேடு இயந்திரம் (Bio-metric) ரூ.70,000/– மதிப்பீட்டில் கொள்முதல் செய்யும் பணிக்கு 07.11.2023 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ் கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.</td>
<td>தீர்மான எண்- 1054<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| வ எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி ரூ |
|---|---|---|
| 1 | ப்ரக்யா எண்டர்பிரஸஸ் நெ,124 நோதாஜி ரோடு விழுப்புரம் 605602 | 64310.00 |
| 2 | சாம்டெக் கம்யூட்டர் எக்கீயூமென்ட் நெ525 ஜவஹர்லால் நேரு தெரு விழுப்புரம் 605602 | 66670.00 |
| 3 | சேலஞ்சர் கம்யூட்டர்ஸ் நெ839 அண்ணாசாலை சென்னை | 68204.00 |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 ல் உள்ள ப்ரக்யா எண்டர்பிரஸஸ் நெ,124 நோதாஜி ரோடு விழுப்புரம் நிறுவனத்தின் விலைப்புள்ளி **ரூ.64,310.00** குறைவாக உள்ளதனை ஏற்று நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**

நகர்மன்றதலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதனை மன்றம் ஏற்கலாம்

ந.க.எண் : 5415/2015/அ1 .

---

**பொருள் எண்-11**

இந்நகராட்சிக்கு சொந்தமான மீன்மார்க்கெட் கட்டிடம் பழுதடைந்துள்ளதை இடித்து கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டம் 2023-2024-ன் கீழ் நவீன முறையில் புதிய மீன்மார்கெட் கட்டிடம் கட்டும் பணிக்கு நகராட்சி ஆணையரின் பணி ஆணை ந.க.எண்:798/2023/இ1/1 நாள்.13.11.2023-படி பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேற்படி கட்டிடத்தில் இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை இனங்கள் 1) மீன்மார்கெட் 2) மாமிச மார்க்கெட் 3) ஆடுவதை செய்யும் இடம் ஆகிய குத்தகை இனங்களின் கேட்புகளை 01.01.2024 முதல் நீக்கம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்:191/2021/அ1

தீர்மான எண்-1055
நாள்.22.12.2023
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

**பொருள் எண்-12**

சீர்காழி நகராட்சி – பொதுநிதி திட்டம் 2023–24 – சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களின் நிலுவை மற்றும் நடப்பு தொகையினை வரிவிதிப்பாளர்கள் செலுத்திட ஆட்டோவுடன் கூடிய ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்யும் பணிக்கு 30.10.2023 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ் கண்டுள்ளவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி( நாள் ஒன்றிக்கு) ரூ |
|---|---|---|
| 1 | ஜெயந்தி ஆடியோஸ் ஊழியன்காரன்தோப்பு பூந்தோட்டம் தெரு சீர்காழி | 2500.00 |
| 2 | லஷ்மி ஆடியோஸ் திருமஞ்சன வீதி சீர்காழி | 2700.00 |
| 3 | சுரேஷ் ரேடியோஸ் தென்பாதி சீர்காழி | 2800.00 |

தீர்மான எண்-1056
நாள்.22.12.2023
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 ல் உள்ள ஜெயந்தி ஆடியோஸ் ஊழியன்காரன்தோப்பு பூந்தோட்டம் தெரு சீர்காழி நிறுவனத்தின் விலைப்புள்ளி **ரூ.2500.00** குறைவாக உள்ளதனை ஏற்று நகர்மன்றதலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதனை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்டுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : நகர்மன்றதலைவரின் முன் அனுமதிபெற்று பணி உத்திரவு வழங்கியதனை மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண் : 2347/2023/அ1

---

பொருள் எண்-13

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வரிவசூல் தொடர்பாக நடைப்பெற்ற ஆய்வுக்கூட்டங்களில் இந்நகராட்சி 2023–24ம் ஆண்டு வரிவசூலில் மிகவும் பின்தங்கியுள்ளதாலும், வரிவசூல் தொடர்பாக தீவிர வரிவசூல் செய்திட அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொண்டு வரி வசூல் 100 சதவீதம் எய்திட துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டது.

அதன்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளில் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா இனங்களின் நிலுவை மற்றும் நடப்பு தொகையினை தினசரி வார்டு வாரியாக வரிவிதிப்பாளர்களின் வசதிக்காக ஒரே இடத்தில் (Camp) அமைத்து வசூல் செய்திடவும் தினசரி கேம்ப் நடைபெறும் இடம் குறித்து பொதுமக்களுக்கு ஆட்டோவுடன் கூடிய ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்திடவும், செலவீனம் மற்றும் இதர செலவினங்களுக்கும் ( சாமியானா பந்தல் டேபிள் சேர் உள்பட) நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும் இதற்காகும் உத்தேச செலவீனம் **ரூ.2,00,000/–** நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u> நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2852/2023/அ.1

தீர்மான எண்- 1057
நாள்.22.12.2023
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

---

பொருள் எண்-14

இந்நகராட்சியில் புதியதாக சொத்துவரி, காலிமனை வரிவிதிப்பு, மற்றும் சொத்துவரி பெயர் மாற்றம் போன்றவைகளுக்கு வரிவிதிப்பாளர்களால் விண்ணப்பங்கள் இந்நகராட்சிக்கு வழங்கப்படும் போது, கணிணியில் பதிவேற்றம் செய்யப்படும் போது விண்ணப்ப கட்டணம் இன்றி கொடிநாள் தொடர்பாக, மேற்கண்ட அனைத்து விண்ணப்பங்களுக்கும் **ரூ100/–** வரிவிதிப்பாளர்களிடம் வசூலிக்கப்பட்டு வருகின்றது. விண்ணப்பக்கட்டணம் அனைத்து நகராட்சிகளிலும் கூடுதலாக பெறப்படும் நிலையில், நகராட்சி வருவாயினை உயர்திடும் பொருட்டு மேற்கண்டுள்ள விண்ணப்பங்களுக்கு கீழ்கண்டுள்ளவாறு தொகையினை நிர்ணயம் செய்திடவும்,

| வ எண் | விண்ணப்பங்களின் விபரம் | கொடிநாள் தொகை. ரூ | ஒரு வரிவிதிப்பிற்குரிய விண்ணப்பம் பதிவேற்ற தொகை. ரூ |
|---|---|---|---|
| 1 | சொத்து வரி | 100 | 200 |
| 2 | காலிமனை வரி | 100 | 200 |
| 3 | சொத்துவரி பெயர்மாற்றம் | 100 | 200 |
| 4 | குடிநீர் இணைப்பு | 100 | 200 |

தீர்மான எண்- 1058
நாள்.22.12.2023
அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

<table>
<tr>
<td></td>
<td>
மேலும் புதிதாக சொத்துவரி, காலிமனை வரி சொத்துவரி பெயர்மாற்றம் மற்றும் புதிய குடிநீர் இணைப்பு விண்ணப்பங்கள் அச்சகங்களின் மூலமாக அச்சடித்து பெற்றிடவும் விண்ணப்ப படிவங்களுக்கு, கீழ்கண்டுள்ளவாறு தொகையினை நிர்ணயம் செய்து விண்ணப்பதாரர்களிடம் நகராட்சி கருவூலத்தின் மூலம் வசூல் செய்திடவும், மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ எண்</th><th>விண்ணப்பங்களின் விபரம்</th><th>விண்ணப்பங்களின் கட்டணம் ரூ</th></tr>
<tr><td>1</td><td>சொத்து வரி</td><td>50</td></tr>
<tr><td>2</td><td>காலிமனை வரி</td><td>50</td></tr>
<tr><td>3</td><td>சொத்துவரி பெயர்மாற்றம்</td><td>50</td></tr>
<tr><td>4</td><td>குடிநீர் இணைப்பு</td><td>50</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:</u> மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>
ந. க. எண் : 2850/2023/அ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-15</td>
<td>
இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்டுள்ள குத்தகை இனங்களில் குத்தகை உரிமதாரர்கள் இந்நகராட்சிக்கு செலுத்தவேண்டிய குத்தகை தொகையினை செலுத்தாததால் உரிமத்தினை ரத்து செய்து துறையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு குத்தகையினத்தினை கையுகப்படுத்தி வசூல் செய்யப்பட்டு வருகின்றது,<br>
ஏல நிபந்தனை அறிக்கையில் தெரிவித்துள்ளவாறு 1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 326 பிரிவின்படியும் 04.04.1938ம் தேதிய உள்ளாட்சித்துறை அரசு ஆணை எண்.1216 மற்றும் 22.07.2001–ம் தேதிய உள்ளாட்சித்துறை அரசு ஆணை எண்.1915 ல் கண்டுள்ள விதிகளி 3(4) ன் படியும் அரசு ஆணை எண்.181 நாள்.19.09.2008 ன் படியும் ஒப்படைக்கும் நாள் மூன்றாண்டு காலத்திற்கு கட்டணம் வசூலித்துக்கொள்ளும் உரிமத்திற்கான பொதுஏலம் / ஒப்பந்தப்புள்ளிகள் கோர செலுத்த வேண்டிய பொறுப்பு தொகை கூடுதல் வைப்பு தொகை திருத்தியமைக்கவும் தொடர்பான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>குத்தகை விவர அட்டவணை</u>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஏல இனங்களின் விவரம்</th><th>காலம்</th><th>ஒப்பந்தப்புள்ளி கோர செலுத்த வேண்டிய பொறுப்புத் தொகை (வங்கி வரைவோலை) ரூ.</th><th>கூடுதல் வைப்புத் தொகை (வங்கி வரைவோலை) ரூ.</th><th>முன் வைப்பு தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>புதிய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறை மற்றும் குளியளறைக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்</td><td>ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு</td><td>3,00,000/–</td><td>2,00,000/–</td><td>5000/–</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண்-1059<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>2</td><td>பழைய பேருந்து நிலையத்தில் உள்ள கட்டண கழிப்பறை மற்றும் குளியளறைக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்</td><td>ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு</td><td>3,00,000/–</td><td>2,00,000/–</td><td>5000/–</td></tr>
<tr><td>3</td><td>நகராட்சி எல்லைக்குட்பட்ட இடத்திற்கு வரும் யாத்ரீகர்கள் ஊர்திகளுக்கு கட்டணம் வசூலிக்கும் உரிமம்</td><td>ஒப்படைக்கும் நாள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு</td><td>3,00,000/–</td><td>2,00,000/–</td><td>––––</td></tr>
</table>
<u>அலுவலகக்குறிப்பு</u>: மன்றம் அனுமதிக்கலாம்<br>
ந க எண்:2851/2023/அ.1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-16</td>
<td>சீர்காழி நகராட்சி வடக்கிழக்கு பருவமழை 2023 கனமழை காலங்களில் பழுதடையும் சாலைகளை தற்காலிகமாக சீரமைப்பு செய்து விபத்துகளை தடுக்கும் பொருட்டு சாலையில் உள்ள பள்ளங்கள் காரணமாக பொது போக்குவரத்து மற்றும் பொது மக்கள் சாலையில் செல்ல சிரமமாக உள்ள காரணத்தாலும் அதனை சரி செய்து தர வேண்டியுள்ளது. மேலும் நகராட்சி நிர்வாக இயக்குநர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆகியோரால் நடத்தப்படும் காணொலி காட்சி கூட்டம் மற்றும் நேரடி ஆய்வு கூட்டங்களில் மழை காலங்களில் பொது போக்குவரத்து மற்றும் பொது மக்களுக்கும் தேவையான அத்தியாவசிய அடிப்படை வசதிகள் செய்து தர அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனவே நகர்மன்றத்தலைவர், நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் அறிவுரையின்படி, பழுதான சாலைகளில் WMM கொண்டு சீரமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.00 இலட்சம் ஆகும். இதனை பொதுநிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u> 1. நகர்மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரலாம்.<br>
2. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்: /2023/இ1</td>
<td>தீர்மான எண்-1060<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-17</td>
<td>சீர்காழி நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள நகர்மன்றகூட கட்டிட முதல் தளத்தில் கூடுதலாக நகர்மன்ற உறுப்பினர்கள் அறை மற்றும் கழிப்பறை வசதிகள் செய்து தர கோரி, நகர்மன்றதலைவர் அவர்களின் கடிதத்தின்படி, நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோரால் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. மேல்நிலைநீர்தேக்கதொட்டிக்கு அருகில் கட்டப்பட்டுள்ள கழிப்பறையின் மேல்தளத்தில் கூடுதலாக நகர்மன்ற உறுப்பினர்கள் அறை மற்றும் கழிப்பறை கட்டும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.4.10 இலட்சத்திற்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவீனம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலகக்குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>
ந.க.எண்: /2023/இ1.</td>
<td>தீர்மான எண்-1061<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>பொருள் எண்-18</td>
<td>நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுஎண்:22 மாரியம்மன்கோவில் தெரு செல்லும் வழியில் உள்ள சிறுபாலம் சேதமடைந்து விபத்து ஏற்படும் அபாயம் உள்ளதால் புதியதாக சிறுபாலம் அமைத்து தர அப்பகுதி நகர்மன்ற உறுப்பினர் அவர்களின் விண்ணப்பத்தின்படி, நகர்மன்ற தலைவர், நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோரால் நேரில் ஆய்வு செய்யப்பட்டது. அப்போது அவ்விடத்தில் சிறுபாலம் கட்ட வேண்டியது அவசியமாகிறது. எனவே மேற்படி சிறுபாலம் கட்ட தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.1.80 இலட்சத்திற்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலகக்குறிப்பு:</u> மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2707/2023/இ1.</td>
<td>தீர்மான எண்-<br>1062<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண்-19</td>
<td>சீர்காழி நகராட்சி 24 வார்டுகளை உள்ளடக்கி மக்கள் தொகை கொண்ட இரண்டாம் நிலை நகராட்சி ஆகும். இந்நகராட்சியில் பொறியியல் பிரிவில் நகராட்சி பொறியாளர், பொதுப்பணிமேற்பார்வையாளர், மின்கம்பியாளர்,குழாய் பொருத்துனர்,பம்பு மெக்கானிக் மற்றும் குடிநீர் திட்ட பணியாளர்கள் 2 நபர்கள் பணிப்புரிந்து வருகிறார்கள். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை அரசாணை (நிலை) எண்:10 நாள்:23.01.2023–ன்படி இரண்டாம் நிலை நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட பணி இடங்களில் பட வரைவாளர்–1, பணி ஆய்வாளர்–2 ஆகிய பணியிடங்கள் காலியாக உள்ளது. மேலும், இதர பணிகளுக்கு வெளிகொணர்வு (Out Source) முறையில் அமர்த்தி மேற்கொள்ள Lr,No.539/2005/F.3 நாள்,28.1.2005–ல் அனுமதிக்கப்பட்டுள்ளதன்படி மாவட்ட ஆட்சியர் மயிலாடுதுறை அவர்களின் கடித ந.க.எண் 3391/2023/ஈ1 நாள் 09.06.2023–ன் விலை விகித்தின்படி பணி மேற்கொள்ள அவசியம் உள்ளது.<br>எனவே, நகராட்சியின் திட்டப்பணிகளை மேற்கொள்ள பொறியாளர் மற்றும் பொதுப்பணிமேற்பார்வையாளருக்கு உதவியாக 2 தொழில்நுட்ப பணியாளர்கள், அலுவலக மின்மோட்டார் அறை , குடிநீர் மேல்நிலைதொட்டிகள் மற்றும் சிறுமின்விசைபம்புகள் ஆகியவற்றை இயக்க 10 நபர்கள் ஆக கூடுதல் 12 நபர்கள் கீழ்கண்ட விவரப்படி,
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியாளர் நிலை</th><th>ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு தொகை (ரூ.)</th></tr>
<tr><td>1</td><td>தொழில்நுட்ப பணியாளர்கள் 2 நபர்கள்</td><td>690/–</td></tr>
<tr><td>2</td><td>குடிநீர் மேல்நிலைதொட்டி இயக்குபவர்கள் 6 நபர்கள்</td><td>490/–</td></tr>
<tr><td>3</td><td>சிறுமின் விசைபம்பு 2 நபர்கள்</td><td>490/–</td></tr>
<tr><td>4</td><td>மின்மோட்டார் அறை 2 நபர்</td><td>490/–</td></tr>
</table>
மேற்கண்டவாறு பணியாளர்களை கொண்டு 01.01.2024 முதல் 30.06.2024 வரை பணி மேற்கொள்ள ஆகும் செலவீனம் ரூ.11,30,400 /– மற்றும் (ESI மற்றும் EPF ரூ.1,46,952/–) ஆக கூடுதல் தொகை ரூ.12,77,352/– 6 மாதத்திற்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் மேலும் இதற்கான செலவீனம் இந்நகராட்சியின் குடிநீர் திட்ட நிதி/பொதுநிதியிலிருந்து தொகை வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்568/2020/இ1</td>
<td>தீர்மான எண்-<br>1063<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| பொருள் எண்-20 | சீர்காழி நகராட்சி கலைஞர் நகர்புற மேம்பாட்டுத் 2023–24 திட்டத்தின் கீழ் புதிய பேருந்து நிலையத்தை மேம்பாடு செய்யும் பணி மேற்கொள்ள உள்ளதை தொடர்ந்து , தற்போது பேருந்து நிலையத்தில் உள்ள பழைய சைக்கிள் நிறுத்துமிடம் (Cycle Stand) இடித்து அப்புறப்படுத்தி அதில் உள்ள பயன்படுத்த கூடிய பொருட்களை ஏலதாரரே எடுத்துக்கொள்ளவும், இடிக்கப்பட்ட சிமெண்ட் காரைகளை நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோரின் அறிவுரையின்படி, தெரிவிக்கப்படும் இடத்தில் கொட்டவும், ஏலம் கோரிட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:798 /2023/இ1 | தீர்மான எண்- 1064<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-21 | சீர்காழி நகராட்சி பொறியியல் பிரிவில் மேற்கொள்ளப்படும் திட்டப்பணிகளில் அறிவிக்கப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை Online–ல் பதிவேற்றம் செய்திட ஏதுவாக நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் இ1 பிரிவு எழுத்தருக்கு இரண்டு Digital Itentity E-Token Card வாங்கிட ஆகும் செலவீனம் **ரூ.8,000/–**ஐ பொதுநிதியின் கீழ் உடன் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:798 /2023/இ1 | தீர்மான எண்- 1065<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-22 | நகராட்சி புதிய போருந்து நிலையத்தின் உரிமம் முடிவடைந்துள்ள நிலையில் மீண்டும் பேருந்து நிலையத்தின் உரிமத்தை புதுப்பித்திட வட்டார போக்குவரத்து ஆய்வர், சீர்காழி அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதை தொடர்ந்து நேரில் போக்குவரத்து ஆய்வர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு உரிமம் நீட்டிப்பு செய்ய அத்தியாவசய குறைகளை நிவர்த்தி செய்ய அறிவுறுத்தப்பட்டது. அதன்படி ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண்–7210/2014/அ1 நாள்.06.12.2023 ன்படி நகராட்சி பொறியாளர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு உடனடி அத்தியாவசய பணிகளை மேற்கொள்ள தயாரிக்கப்பபட்ட மதிப்பீடு **ரூ.1.20** இலட்சத்திற்கு பொதுநிதியின் கீழ் உடன் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நகர்மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:7240 /2023/இ1 | தீர்மான எண்- 1066<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-23 | நகராட்சி வார்டு எண்:13 ஸ்டேட் வங்கி அருகில் புதியதாக கட்டப்பட்டுள்ள மழை நீர் வடிகாலினை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நேரடியாக ஆய்வு செய்யப்பட்ட போது போக்குவரத்து நெரிசல் அதிகமாக உள்ள பகுதியாக இருப்பதால் பொதுமக்களின் பாதுகாப்பினை கருதி மேற்படி, மழை நீர் வடிகாலில் மூடுஉரை (Cover Slab) அமைத்திட அறிவுறுத்தியதின்படி, தயாரிக்கப்பட்ட மதிப்பீடு **ரூ.1.00** இலட்சத்திற்கு நகராட்சி பொதுநிதியிலிருந்து பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: /2023/இ1 | தீர்மான எண்- 1067<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-24 | சீர்காழி நகராட்சியில் வளர்ச்சி திட்டப் பணிகளுக்காக திருமதி.சத்தியப்பிரியா க/பெ.கலியமூர்த்தி நெ.24 உக்கடையார் நகர், திருக்கோலக்கா, சீர்காழி என்பவரிடமிருந்து நிலம் வாங்குவதற்கான சம்மத கடிதத்தினை தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஒப்புதல் மற்றும் அரசு வழிகாட்டுதலின்படி விலை நிர்ணயம் செய்து தருவது குறித்து நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை மற்றும் அரசிற்கு பிரேரணை அனுப்ப வேண்டியுள்ளதால் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது. | தீர்மான எண்- 1068<br>நாள்.22.12.2023 |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு:** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்: 2545/2023/எப்1. | அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-25 | பொது (முதல்வரின் முகவரி)த் துறை அரசாணை (நிலை) எண்:760, நாள்:14.12.2023-ன் படி, சீர்காழி நகராட்சியில் 27.12.2023 முதல் 06.01.2024 வரை ஆகிய தினங்களில் 6 நாட்கள் மட்டும் மக்களுடன் முதல்வர் முகாம் நடைபெற இருப்பதால் முகாமிற்கு தேவையான அனைத்து முன்னேற்பாடு செலவினங்களை மேற்கொள்ளுவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.5,00,000/-ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்:2734/2023/சி1 | தீர்மான எண்-1069<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| பொருள் எண்-26 | சீர்காழி நகராட்சிக்குட்பட்ட 49, கைவிளாஞ்சேரி கிராமம், வார்டு-B பிளாக்-12 T.S.No:56 R.S.No: 67/1A (5463.23 சதுர மீட்டர்) பரப்பளவில் வீடுமனைப்பிரிவு அமைக்க அனுமதி வேண்டி மனுதாரர் திரு.K.R.ராஜகோபாலகிருஷ்ணன் Door No.4C, Old No.18/4C, தியாகராஜர் நகர், கிண்டி, சென்னை-600017 என்பவருக்கு, நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் அவர்கள் SWP/L/DTCP/Ma.Ma.No:38/2023, ந.க.எண்:858/2023 (TCP) நாள்.07.11.2023 உத்தரவில் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப அனுமதி வரப்பெற்றுள்ளது. உத்தரவில் விதித்துள்ள நிபந்தனைப்படி பொது ஒதுக்கீடுகளான சாலை மற்றும் பூங்கா பொது உபயோக இடம் நகராட்சி வசம் நகராட்சி ஆணையர் பெயரில் பத்திர பதிவு செய்து ஒப்படைத்துள்ளார். பத்திர ஆவண எண்:3944/2023 நாள்.09.10.2023, மனைப்பிரிவு அனுமதி கட்டணம் ரூ.6,000 ரசீது எண்:0426, மனைப்பிரிவு விண்ணப்ப கட்டணம் ரூ.500 ரசீது எண்:0426, மனைப்பிரிவு கூராய்வு கட்டணம் ரூ.1,000 ரசீது எண்:0426, வரைப்பட நகல் கட்டணம் ரூ.100 ரசீது எண்:0426, கொடிநாள் ரூ.2,000 ரசீது எண்:0426 நாள்:18.11.2023 அன்று இவற்றை அனைத்தும் நகராட்சி கருவூலத்தில் செலுத்தியுள்ளார். இதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு:** மன்றத்தின் பார்வைக்கு<br>ந.க.எண்:886/2023/எப்1 | தீர்மான எண்-1070<br>நாள்.22.12.2023<br>அலுவலகக் குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

நாள்: 19-12-2023
இடம்: சீர்காழி

நகர்மன்றதலைவர்,
சீர்காழிநகராட்சி